கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட/முதலாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு – 2012/2013
(செப்ரம்பர்/ஒக்டோபர் 2015)

# ED 1112 கல்வியின் அடிப்படை எண்ணக்கரு
# Basic Concept of Education

நேரம் : 02 மணித்தியாலங்கள்

**பகுதி – I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி – II இலிருந்து ஒரு வினாவையும் தெரிவுசெய்து மொத்தமாக மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

---

## பகுதி – I

01.(அ) "கல்விச் செயன்முறையானது மனிதனது திறமையை முழுமையாக வெளிக்கொண்டு வருவதனை அடிப்படையாகக் கொண்டது." இதனை மையமாகக் கொண்டு தற்கால மாணவ சமுதாயத்தை கட்டியெழுப்பக்கூடிய கல்வியின் புதிய நோக்கங்களைப் பற்றிச் சுருக்கமாக ஆராய்க.

(15 புள்ளிகள்)

(ஆ) கல்வியலில் அனைத்து அம்சங்களும் உள்ளடக்கப்படுவதினால் கல்விக்கான வரைவிலக்கணத்தை வரையறுத்துக் கூறுவது கடினமானது. இதற்கான காரணங்களைத் தொகுத்து விமர்சிக்குக.

(15 புள்ளிகள்)

02.(அ) "குழந்தை சமுதாயத்திற்காக பலியிடப்படக்கூடாது" என்னும் அடிப்படைக்கருத்தினை மையமாகக் கொண்டு கல்வியில் இயற்கைவாதத்தின் முக்கியத்துவம் தொடர்பாக ஆராய்க.

(15 புள்ளிகள்)

(ஆ) "பிரச்சினைகளை எதிர்கொண்டு தனிப்பட்ட முறையில் பெறும் அனுபவங்களே உண்மையான கல்வியாகும்." ஜோண் டூயியின் இக்கருத்தினை ஆதாரமாகக் கொண்டு இன்றைய கல்வி முறையில் இதன் சாத்தியப்பாட்டினை விமர்சனம் செய்க.

(15 புள்ளிகள்)

03.(அ) "மாணவர்களின் வாழ்க்கைக்காக தமது வாழ்வை அர்ப்பணிக்கும் உயர் தொழில் ஆசிரியர் தொழில்" ஆனால் இன்றைய செயற்பாட்டில் பிரத்தியேக வகுப்பு கலாச்சாரத்தினால் அத்தொழில் தொடர்பான உயர் எண்ணக்கருக்கள் குழப்பத்திற்குள்ளாகின்றன." இக்கருத்தின் முக்கியத்தும் தொடர்பாகக் கருத்துரைக்குக.

(20 புள்ளிகள்)

(ஆ) கல்வியானது ஒரு தொடர்ச்சியான செயன்முறை என்ற வகையில் முறைசார், முறைசாரா கல்வி உள்ளடக்கியுள்ள விஷேட பண்புகளை எடுத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

## பகுதி – II

04. பின்வரும் தலைப்புகளில் அமைந்த விடயங்களின் முக்கியத்துவத்தை ஆராய்க.

(அ) கல்வியில் தனியாள் நோக்கம்
(ஆ) பாடசாலையின் ஒழுங்கமைப்பு
(இ) ரூசோவும் கல்வித்திட்ட விளக்கமும்
(ஈ) தற்கால கல்வியும் தொழிநுட்பமும்
(உ) புரோபலின் குழந்தைப்பூங்கா

(5x8=40 புள்ளிகள்)

05.இலங்கையின் கல்வி வரலாற்றில் 1972 இல் மேற்கொள்ளப்பட்ட கலைத்திட்டச் சீர்திருத்தம் ஏற்படுத்திய மாற்றங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

(அ) 1972 இல் கல்விச்சீர்த்திருத்தம் மேற்கொள்ளப்படுவதற்கு பின் விசைகளாக அமைந்த காரணிகளை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) இக்கல்விச் சீர்திருத்தத்தின்படி
(i) ஆரம்பக்கல்விக் கலைத்திட்டம்
(ii) இடைநிலைக் கல்விக் கலைத்திட்டம் (6 முதல் 11 வரை) ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துரைக்குக.

(20 புள்ளிகள்)

(இ) இச்சீர்திருத்தத்திலுள்ள குறைபாடுகளும் நடைமுறைச் செயற்பாடுகளில் ஏற்பட்ட சிக்கல்களும் பற்றிய உமது கருத்துக்களை எடுத்துரைக்குக.

(10 புள்ளிகள்)